# NOVENA TO THE HOLY SPIRIT

# PRAYER BOOKLET

## 27/5- 4/6/2022, 8.00PM



## BUKU DOA 祈祷手册

## ஜெப கையேடு

MALACCA JOHORE DIOCESE

www.mjdiocese.my
mjdiocese
malaccajohorediocese

மலாக்கா ஜோகூர் மறைமாவட்டம்
தூயஆவியானவர் நவநாள் செபம் 2022

## கையேடு பொருளடக்கம


ஆரம்பப் பாடல்

படிநிலை

1: ஆரம்ப செபம் படிநிலை

2: இறைவார்த்தை படிநிலை

3: அமைதி (ஆராதனை) படிநிலை

4: மனத்துயர் மன்றாட்டு படிநிலை

5: தூய ஆவியாரின் 7 வரங்களைப் பெற செபம் படிநிலை

6: தூய ஆவியானவரை நோக்கி செபம் படிநிலை

7: தூய ஆவியானவருக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும் செபம் படிநிலை

8: தூய ஆவியானவர் மன்றாட்டு மாலை படிநிலை

9: நிறைவு செபம்: திருதந்தையின் விண்ணப்பம்

நிறைவுப் பாடல்


மறைமாவட்டம்
நாள் 1 - 9

பங்கு
நாள் 2 - 8

தூய ஆவியானவர் நவநாள்

வழிமுறைகள்

ஆரம்பப் பாடல்

S1: ஆரம்ப செபம்

S2: இறைவார்த்தை
S3: அமைதி (ஆராதனை)
S4: மனத்துயர் மன்றாட்டு
S5: தூய ஆவியாரின் 7 வரங்களைப் பெற செபம்
S6: தூய ஆவியாரை நோக்கி செபம்
S7: தூய ஆவியானவருக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும் செபம்
S8: தூய ஆவியானவர் மன்றாட்டு மாலை
S9: நிறைவு செபம்

நிறைவுப் பாடல்

மலாக்கா ஜோகூர் மறைமாவட்டம்
தூயஆவியானவர் நவநாள் செபம் 2022

கருத்து

D1: இயேசு தூய ஆவியானவரை அறிவிக்கின்றார்
D2: இயேசு தூய ஆவியானவரை குறித்து வாக்குறுதி அளித்தார்
D3: இயேசு தந்தையோடு ஒன்றாக இருக்கின்றார்
D4: தூய ஆவியானவரின் வல்லமை
D5: தூய ஆவியானவரின் வாழ்வு
D6: தூய ஆவியானவரில் ஒன்றித்தல்
D7: உண்மையின் ஆவியானவர்
D8: வாழ்வளிக்கும் ஆவியானவர்
D9: கடவுளின் ஆவியைப் பெற்றுக்கொள்

ஆரம்பப் பாடல்

படிநிலை 1 : ஆரம்ப செபம்

1 -ம் நாள்

மீட்பராகிய எங்கள் இறைவா, கிறிஸ்துவின் உயிர்தெழுதல் வழியாக நாங்கள் மீண்டும் திருமுழுக்கு மற்றும் புதுவாழ்வுப் பெற்று பிறந்துள்ளோம். உமது வலப்புறம் அமர்ந்திருக்கும் உமது திருமகன் இயேசு கறிஸ்துவின்பால் எங்கள் உள்ளங்களை திருப்பியருளும். உமது ஆவியால் எங்களை பாதுகாத்தருளும். அவர் மகிமையில் வரும் வரையில், எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இன்றும் என்றென்றும் ஆமென்.

2- ம் நாள்

ஞானத்தின் ஆண்டவரே, உமது திருமகன் அப்போஸ்தலருக்கு வாக்களித்தார். அவர் வானத்திற்கு எழுந்தருளியப் பின் உமது வாக்குறுதியை நிறைவேற்றினீர். உமது தூய ஆவியானவரின் வரங்களை தாரும், எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இன்றும் என்றென்றும் ஆமென்.

3- ம் நாள்

எங்கள் மீட்பராகிய ஆண்டவரே, இயேசு உம்மோடு மகிமையில் இணைந்திருக்கிறார் என்று நாங்கள் நம்புகிறோம். அவர் வாக்களித்தப்படியே ஆவியில் எங்களோடு இறுதி காலம் வரை இருக்கின்றார், எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இன்றும் என்றென்றும் ஆமென்.

4- ம் நாள்

தூய வல்லமைமிக்க இறைவா, உமது ஆவி எங்களிலேயே இறங்கி, நாங்கள் உமது தூய ஆலயமாகும் வரை எங்களில் தங்குவதாக, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இன்றும் என்றென்றும் ஆமென்.

5- ம் நாள்

தூய இறைவா, உமது வல்லமைமிக்க தூய ஆவியானவர் எங்கள் மேல் இரங்குவதாக. எனவே, நாங்கள் விசுவாசத்தோடு, உம் சித்தத்திற்கு பணிந்து எங்கள் வாழ்க்கையில் அதைக் கடைப்பிடிக்க அருள்புரியும், எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இன்றும் என்றென்றும் ஆமென்.

மலாக்கா ஜோகூர் மறைமாவட்டம்
தூயஆவியானவர் நவநாள் செபம் 2022

6 - ம் நாள்

எல்லாம் வல்ல இறைவா, தூய ஆவியானவரில் உம் திரு அவையை ஒன்றிணைத்தீர். அன்பால் இணைக்கப்பெற்று உண்மையாக உமக்கு பணிபுரிவோமாக, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இன்றும் என்றென்றும் ஆமென்.

7 – ம் நாள்

தூய இறைவா, உமது தூய ஆவியை எங்கள் மீது பொழிந்தருளும். இதனால் நாங்கள் உமது திருவுளத்தை நிறைவேற்றி, தகுதி பெறுவோமாக, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இன்றும் என்றென்றும் ஆமென்.

8 – ம் நாள்

முடிவில்லா ஒளியின் இருப்பிடமான இறைவா, உமது திருமகனின் மகிமையால் தூய ஆவியானவரை அனுப்பி, முடிவில்லா வாழ்விற்கு வழியைத் திறந்தீர். இறையன்பையும் நம்பிக்கையும் நீர் வளர்த்தருளும், எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இன்றும் என்றென்றும் ஆமென்.

9 – ம் நாள்

எல்லாம் வல்ல இறைவா, உயிர்தெழுந்து உம் திருமகன் எங்களுக்கு புதுவாழ்வு அளித்தார். உயிர்தெழுதலின் அருளை எங்கள் அன்றாட வாழ்வில் உம் தூய ஆவியானவர் உதவியோடு உணரச் செய்தருளும், எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இன்றும் என்றென்றும் ஆமென்.

படிநிலை 2 : இறைவார்த்தை

1- ம் நாள் : இயேசு தூய ஆவியானவரை அறிவிக்கின்றார்
வாசகம் - யோவான் 14: 25 -26

2- ம் நாள் : இயேசு தூய ஆவியானவரை குறித்து வாக்குறுதி அளித்தார்
வாசகம் - யோவான் 14: 15 - 16

3- ம் நாள் : இயேசு தந்தையோடு ஒன்றாக இருக்கின்றார்
வாசகம் - யோவான் 14: 20

4 – ம் நாள் : தூய ஆவியானவரின் வல்லமை
வாசகம் - யோவான் 14: 12

5 – ம் நாள் : தூய ஆவியானவரின் வாழ்வு
வாசகம் - யோவான் 14: 27

6 – ம் நாள் : தூய ஆவியானவரில் ஒன்றித்தல்
வாசகம் - யோவான் 17: 21

7 – ம் நாள் : உண்மையின் ஆவியானவர்
வாசகம் - யோவான் 16: 8 – 9

8 – ம் நாள் : வாழ்வளிக்கும் ஆவியானவர்
வாசகம் - யோவான் 6: 63

9 – ம் நாள் : கடவுளின் ஆவியைப் பெற்றுக்கொள்
வாசகம் - யோவான் 20: 21 - 22

மலாக்கா ஜோகூர் மறைமாவட்டம்
தூயஆவியானவர் நவநாள் செபம் 2022

படிநிலை 3 : அமைதி (ஆராதனை)

படிநிலை 4: மனத்துயர் மன்றாட்டு

https://www.vaticannews.va/en/prayers/act-of-contrition.html

என் இறைவனாகிய தந்தையே! நீர் நன்மை நிறைந்தவர் எனவே, எல்லாவற்றிற்கும் மேலாக உம்மை நான் அன்பு செய்கிறேன். என் பாவங்களால் உமது அன்பை மறந்ததற்காக மனம் வருந்துகிறேன். உமது அருளுதவியால் இனிமேல் பாவம் செய்வதில்லையென்று உறுதி கூறுகிறேன். ஆமென்.

படிநிலை 5 : தூய ஆவியாரின் 7 வரங்கள் பெறச் செபம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, விண்ணகத்திற்குச் செல்லும் முன் உமது திருத்தூதர்கள் மற்றும் சீடர்களின் ஆன்மாக்களின் வேலைகளை நிறைவேற்ற தூய ஆவியானவரை அனுப்புவதாக வாக்களித்தீரே. உமது இரக்கத்தின் அன்பின் வேலைகளை எங்கள் ஆன்மாக்களில் முழுமையாக்க, அதே தூய ஆவியாரை எங்களுக்கும் தந்தருளும். அழிந்து போகும் இவ்வுலகச் செல்வங்கள் மீது பற்று கொள்ளாமல், நிலைவாழ்வை அளிக்கும் உன்னதச் செல்வத்தின் மீது ஆசை கொள்ள உமது ஞானத்தின் ஆவியைப் பொழிந்தருளும். உமது தெய்வீக உண்மையின் ஒளியால் எங்களது மனதை விழிப்பூட்ட உமது புரிந்துணர்வின் ஆவியைப் பொழிந்தருளும். கடவுளை மட்டும் மகிழ்வித்து விண்ணகத்தை அடையும் வழியைத் தேர்ந்தெடுக்க உமது ஆலோசனையின் ஆவியைப் பொழிந்தருளும். எங்கள் மீட்புக்கு எதிரானத் தடைகளைச் சகித்து, எங்களது சிலுவையை சுமந்து உம்மைப் பின்செல்ல உமது வலிமையின் ஆவியைப் பொழிந்தருளும். கடவுளை அறிய, எங்களை அறிய, புனிதர்களின் வழியைப் பின்பற்றி முழுமை அடைய உமது அறிவின் ஆவியைப் பொழிந்தருளும். கடவுளுக்கு செய்யும் சேவையில் இனிமையும் மகிழ்ச்சியும் அடைய உமது பக்தியின் ஆவியைப் பொழிந்தருளும். நாங்கள் கடவுளிடம் அன்பான பயபக்தி கொண்டு, கடவுளை வருத்தப்படுத்தும் எந்தச் செயலையும் செய்யாமலிருக்க உமது தேவ பயத்தின் ஆவியைப் பொழிந்தருளும்.

ஆண்டவரே உமது உண்மைச் சீடர்களின் அடையாளத்தால் எங்களை முத்திரையிட்டு, உமது ஆவியால் எங்களை வழிநடத்தியருளும். ஆமென்.

படிநிலை 6 : தூய ஆவியானவரை நோக்கி செபம்
https://www.loyolapress.com/catholic-resources/prayer/traditional-catholic-prayer/prayersevery-catholic-should-know/prayer-to-the-holy-spirit/

தூய ஆவியே, எழுந்தருள்வீர். உள்ளங்களை உம் ஒளியால் நிரப்புவீர். அவற்றில் அன்புத் தீயை மூட்டியருள்வீர். உம்முடைய ஞானக்கதிர்களை வரவிடுவீர். அதனால் உலகைப் புதுப்பிப்பீர்.

இறைவா, தூய ஆவியின் ஒளியால் விசுவாசிகளின் இதயங்களுக்கு அறிவூட்டுகின்றீர். அந்த ஆவியினால் நாங்கள் சரியானவற்றை உணரவும், அவர் அளிக்கும் ஆறுதலினால் என்றும் மகிழ்ந்திருக்கவும் எங்களுக்கு அருள்வீராக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

மலாக்கா ஜோகூர் மறைமாவட்டம்
தூயஆவியானவர் நவநாள் செபம் 2022

படிநிலை 7: தூய ஆவியாருக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும் செபம்

விண்ணகத் தந்தையோடும் அவரது திருமகனாம் இயேசு கிறிஸ்துவோடும் உறவாடும் தூய ஆவியாரே! விண்ணகச் சாட்சிகளின் பெருங்கூட்டத்திற்கு முன் முழந்தாள்படியிட்டு, என்னையும், என் ஆன்மாவையும், என் உடலையும் அர்ப்பணிக்கிறேன். உமது தூயஸ்மயின் பிரகாசத்தையும், உமது தவறாத நீதியின் திறமையையும், உமது அன்பின் வலிமையையும் நான் போற்றிப் புகழ்கிறேன். என் ஆன்மாவின் வல்லமையும் ஒளியும் நீரே. நான் இருப்பதும் இயங்குவதும் வாழ்வதும் உம்மாலே தான். என் அவநம்பிக்கையினாலும் என் அற்பப் பாவங்களினாலும் உம்மை நான் ஒருபோதும் துயரத்துக்குள்ளாக்காமலிருக்க என் முழு உள்ளத்தோடு உம்மை நோக்கி மன்றாடுகிறேன். என் ஒவ்வொரு சிந்தனைகளையும் இரக்கத்துடன் காத்து, உமது ஒளியைக் காணவும், உமது குரலைக் கேட்கவும், உமது இரக்கமுள்ள ஊக்கங்களைப் பின்பற்ற தயை புரியும். நான் உம்மை என்றும் பற்றிக் கொண்டு, என் பலவீனத்திலே என்னைக் காக்கும்படி என்னை உமக்களிக்கிறேன். இயேசுவின் துளையுண்ட கால்களைப் பிடித்து, அவருடைய ஐந்து திருக் காயங்களையும் பாா்த்து, அவருடைய திரு இரத்தத்தில் நம்பிக்கை கொண்டு, குத்தித் திறக்கப்பட்ட விலாவையும் இதயத்தையும் வணங்கி, ஆராதனைக்குரிய ஆவியாரே, என் பலவீனத்தின் உதவியாளரே, நான் என்றும் உமக்கு எதிராகப் பாவம் செய்யாதவாறு, உம் அருளினால் என்னைக் காத்தருளும்படி உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன். தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படும் தூய ஆவியாரே, ‘ஆண்டவரே பேசும். உம் அடியான் கேட்கிறேன்’ என்று நான் எங்கும் எப்பொழுதும் சொல்ல உமதருளைப் பொழிந்தருளும். ஆமென்.

படிநிலை 8 : தூய ஆவியானவர் மன்றாட்டு மாலை

ஆண்டவரே இரக்கமாயிரும் - 2
கிறிஸ்துவே இரக்கமாயிரும் - 2
ஆண்டவரே இரக்கமாயிரும் - 2

எங்கள் மேல் இரக்கமாயிரும் ஆண்டவரே*

தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படும் தூய ஆவியே,
தந்தைக்கும் மகனுக்கும் இணையான தூய ஆவியே,
தந்தை வாக்களித்த தூய ஆவியே,
விண்ணக ஒளியின் கதிரான தூய ஆவியே,
எல்லா நன்மைத்தனத்துக்கும் தொடக்கமாகிய தூய ஆவியே,
விண்ணக நீரின் ஊற்றாகிய தூய ஆவியே,
சுட்டெரிக்கும் தீயாகிய தூய ஆவியே,
பற்றியெரியும் அன்பாகிய தூய ஆவியே,
ஞானப் பூசுதலாகிய தூய ஆவியே,
உண்மையினுடைய, அன்பினுடைய தூய ஆவியே,
ஞானமும் மெய்யுணர்வும் தரும் தூய ஆவியே,
ஆலோசனையும் வல்லமையும் தரும் தூய ஆவியே,
அறிவும் பக்தியும் தரும் தூய ஆவியே,
தெய்வ பயம் தரும் தூய ஆவியே,
அருளும் செபமும் தரும் தூய ஆவியே,
தூய்மையும், மாண்பையும் அருளும் தூய ஆவியே,
ஆறுதல் அளிப்பவராகிய தூய ஆவியே,
புனிதப்படுத்துகிறவராகிய தூய ஆவியே,
திருஅவையை ஆண்டு நடத்தும் தூய ஆவியே,
உன்னதராம் கடவுளின் திருக்கொடையாகிய துய ஆவியே,
உலகையெல்லாம் நிரப்பும் தூய ஆவியே
எம்மை இறைமக்களாகும் தூய ஆவியே,
பாவத்தின் மீது அச்சத்தையும் வெறுப்பையும் உண்டாக்கம் செய்யும் தூய ஆவியே,

எங்கள் மேல் இரக்கமாயிரும் ஆண்டவரே

உலகின் முகத்தைப் புதுபிக்கும் தூய ஆவியே
எங்கள் ஆன்மாவில் ஒளியேற்றும் தூய ஆவியே,
எங்கள் இதயங்களில் உம் சட்டத்தைப் பொறிக்கும் தூய ஆவியே,
உம் அன்புத்தீயால் எங்கள் உள்ளங்களைப் பற்றியெரியச் செய்யும் தூய ஆவியே,
சரியாகச் செபிக்கக் கற்றுத்தாரும் தூய ஆவியே,
விண்ணுலக தூண்டுதல்களால் எங்களை ஊக்குவிக்கும் தூய ஆவியே,
மீட்பின் வழியில் எம்மை வழிநடத்தும் தூய ஆவியே,
வாழ்வு தரும் நன்னீராகிய தூய ஆவியே,
நீதியில் எம்மை நிலைத்திருக்கச் செய்யும் தூய ஆவியே,
எமக்காகப் பரிந்துரைப்பவரான தூய ஆவியே,
எல்லாவற்றையும் எங்களுக்குக் கற்பிக்கும் தூய ஆவியே,

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே,
எங்கள் மேல் இரக்கமாயிரும்.
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே,
எங்கள் மேல் இரக்கமாயிரும்.
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே,
எங்களுக்கு அமைதி அருளும்.

முதல்வர் : தூய ஆவியே, எழுந்தருளி வாரும்! உம் விசுவாசிகளின் இதயங்களை நிரப்பியருளும்.
எல் : உம் அன்புத் தீயால் அவர்களின் உள்ளத்தைப் பற்றியெரியச் செய்தருளும்.

செபிப்போமாக: எங்கள் அடைக்கலமும் ஆறுதலுமாகிய இறைவா, உம்முடைய ஆவியால் எங்களை வழிநடத்துகின்றீர். உமது அருட்காவலில் நாங்கள் உயிர்வாழச் செய்கிறீர். எம் மீது இரங்கி, எங்கள் வேண்டுதலுக்குச் செவி சாய்த்தருளும். உம்மையே நம்பியிருக்கும் எங்கள் விசுவாசம் மேன்மேலும் உறுதி பெறுமாறு, உம்முடைய ஆவியின் கொடைகளை எங்களுக்கு நிறைவாய்த் தந்து உதவியருள்வீராக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல் : ஆமென்.

படிநிலை 9 : நிறைவு செபம்: திருதந்தையின் விண்ணப்பம்

இயேசு கற்பித்த செபம்

மங்கள வார்த்தை செபம்

மூவொரு இறைவன் புகழ்

நிறைவுப் பாடல்